வி. மயாக்கோவ்ஸ்க்கிய்

நல்லது என்றால் என்ன கெட்டது என்றால் என்ன

T 28198

செல்லப் பிள்ளை சிண்டுப் பையன்
அப்பாவிடம் கேட்டான்:
''சொல்லு, நல்லது என்றால் என்ன,
கெட்டது என்றால் என்ன?''

மறைக்க மாட்டேன் குழந்தைகளே,
உங்களிடம் எதையும்.
உரைத்திடுவேன் தந்தை சொன்ன
பதிலை இங்கு, கேட்பீர்.

ஆலங்கட்டி சடசடக்க
மழையும் காற்றும் அடித்தால்
பாலர்கள் உலாவிடவே
கெட்டது அந்தப் பருவம்.

சாரல் ஓய்ந்த பின்பு வெயில்
சுள்ளென்று அடித்தால்
ஆர்வமாகக் காய்வதற்கு
அனைவருக்கும் நலமே.

பையன் மேனியும் முகமும்
படையாய் அழுக்கு அடைந்தால்
ஐயே, ரொம்பக் கெட்டதாகும்
குழந்தைச் சருமத்துக்கு.

தினமும் பல்லைத் தேய்த்து,
சோப்பால்
உடம்பைக் கழுவும் சிறுவன்
இனியவன், அவன் செய்வது
மிக்க நல்லது ஆகும்.



கெட்ட சண்டைக்கார வம்பன்
எளிய பயலை அடித்தால்
கட்டோடே பிடிக்காது எனக்கு
படத்தில் கூடக் காட்ட.

சின்னவர்களைத் ''தொடாதே''
என்று அதட்டும் இவன்தான்
என்ன அழகன், எவ்வளவு
நல்லவன், பாருங்கள்!





பந்தைக் கிழித்து, புத்தகத்தைப்
பிய்த்து எறிந்தாயானால்
இந்தப் பையன் கெட்டவன்
என்பார்கள் நல்ல சிறுவர்.

புத்தகத்தில் விளக்கம்
பார்த்து,
பொருத்திப் பொருள்கள்
செய்ய
மெத்த விரும்பும் பையனையே
மெச்சுவார் எல்லோரும்.

காக்கை கரைய, அஞ்சி அலறி
ஓடும் இந்த மொழுக்கன்,
பார்க்கப்போனால் கோழை, இவன்
செய்கை கெட்டது ஆகும்.

உருவில் சின்னவன்
ஆனாலும்
பெருந் தாராவை
அதட்டும்



சிறுவன் இவன் வீரன்,
வாழ்வில்
சீரும் சிறப்பும்
அடைவான்.

சேற்றில் அளைந்து ஆடை அழுக்கு
ஆனதிலே மகிழும்
ஊற்றைப் பையன் உதவாக்கரை
என்பார்கள் எல்லோரும்.

செருப்புக்களைத் துடைத்து ரப்பர்
ஜோடுகளைத் தானே
விருப்புடனே கழுவும் இவன்
மிகவும் நல்ல பையன்.



புதல்வர் எல்லாம், சிறுவர் எல்லாம்
புரிந்துகொள்வீர் இதையே.
மதலை பன்றிக்குட்டி என்றால்
வளர்ந்து பன்றியே ஆகும்.

செல்ல மகன் இதனைக் கேட்டுத்
தீர்மானித்துக் கொண்டான்:
"நல்லதே செய்வேன் எந்நாளும்
கெட்டது செய்ய மாட்டேன்."



மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்
ஓவியர்: வி. கிரீலவ்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

В. Маяковский
ЧТО ТАКОЕ ХОРОШО И ЧТО ТАКОЕ ПЛОХО
На тамильском языке

V. Mayakovsky
WHAT IS GOOD AND WHAT IS BAD
In Tamil
3rd edition

ISBN 5-05-003366-7